# தமிழுதயம்

## 3ம் நாள் நினைவு மலர்

04-08-2021 (புதன்கிழமை)



அமரர்.

## நாகமணி காசிப்பிள்ளை

பிள்ளையார் கோயில் வீதி, பாண்டிருப்பு-01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர்.

# நாகமணி காசிப்பிள்ளை

பிள்ளையார் கோயில் வீதி,

பாண்டிருப்பு, கல்முனை.

அவர்களின்

## 31ம் நாள் நினைவு மலர்

## 04-08-2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

**தாழ் பணிந்த விழிநீர் காணிக்கை**

அன்பின் இலக்கணமாய்
பண்பின் பெருந்தகையாய்
பாசத்தின் உறைவிடமாய்
அவனியில் எம் மத்தியில்
வாழ்ந்த உத்தமரே!
நெஞ்சம் நிறை நீங்காதெங்கள்
அன்புத் தெய்வமே
அருமைப் பிறப்பே
அடக்கத்தின் இருப்பிடமே!

பாசமனதுடன் தாழ்பணிந்து இம்மலரை சமர்ப்பணம் செய்கின்றோம்.



**குடும்பத்தினர்.**
பிள்ளையார் கோயில் வீதி,
பாண்டிருப்பு, கல்முனை.

தமிழுதயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னை மடியில்:
1934-09-05


ஆண்டவன் அடியில்:
2021-07-05

# அமரர்.
# நாகமணி காசிப்பிள்ளை

(ஓய்வு பெற்ற பிரதி அதிபர்)

பிள்ளையார் கோயில் வீதி,
பாண்டிருப்பு - 01.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளமைப் பருவத்தின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
வெண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

## பஞ்சபுராணம்

## தேவாரம்

முத்தி தருவது நீறு முனிவரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவவினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே

## திருவாசகம்

வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன் மாற்க்கரியோய் நீ
வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீ யாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்
அதுவும் உன் தன் விருப்ப அன்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிர்வளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்கு ஆக
வெளிவளர் தெய்வக் கூத்து கந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடி யார்கள் விரைந்து வம்பின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருள் அளவி
லாதோர் ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள
பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

கற்பனை கடந்தசோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமமாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக்குருபர. . .  எனவோதும்

முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும். . . அடிபேணப்

பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் . . . இரவாகப்

பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் . . . ஒருநாளே

தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு . . . கழுதாடத்

திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக . . . எனவோதக்

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென . . . . முதுகூகை

கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல . . . . பெருமாளே.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கைப் பதிவுகள்....

கடல் வளமும், கலை வளமும் நிறைந்த கல்முனை மாநகரிலே வேளாண் மரபுவழி வந்துதித்த நாகமணி காளியம்மை தம்பதியினருக்கு 07வது அன்பு மகவாய் ஆண் செல்வமாய் சேர்ந்திட காசிப்பிள்ளை என நாமம் பெற்று வளர்ந்தார்.

உடன் பிறப்புகளாக காலஞ்சென்றவர்களான செல்லம்மா, கணபதிப்பிள்ளை, கதிரவேற்பிள்ளை, நல்லதம்பி, தெய்வானைப்பிள்ளை, மற்றும் சாமித்தம்பி ஆகியோரோடு இளையோனாக இணைந்து இரத்தப் பிறப்பானார்.

ஆரம்பக்கல்வியை கல்முனை இராமகிருஷ்ணமிசன் பாடசாலையிலும் பின்னர் மட்/மத்திய பாடசாலையிலும் கற்று நன் மாணாக்கனாகவும், விளையாட்டு வீரனாகவும் திகழ்ந்தார். காலவோட்டத்தில் தனக்குப் பொருத்தமான ஆசிரியத் தொழிலுக்குள் தன்னை இணைத்துக் கொண்டு அன்னமலை நாவிதன்வெளி மகாவித்தியாலயம், யாழ்/வேலணை மத்திய கல்லூரி, கமு/பாண்டிருப்பு இந்து மகா வித்தியாலயம் முதலிய பாடசாலைகளில் தன் பணிதனைத் தொடர்ந்த இவர் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையில் பிரதியதிபராகவும் பணியாற்றினார். பணிக்காலத்தில் தமிழ் வளர் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்வுகளையும் திறம்படச் செயற்படுத்தியதோடு தமிழ்பாடத் துறையில் இலக்கண இலக்கிய மரபோடு கற்பிக்கும் ஆற்றல் மிக்கவராகவும் திகழ்ந்தார். நளவெண்பா, திருக்குறள் நன்னூல் போன்ற பழம்பெரும் தமிழ் அறிவு கூறும் நூல்களைக் கற்றுத் தேர்ந்தவராகவும் காணப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைச் சக்கரத்தில் பாண்டவர் குடி கொண்ட வேளாண் மரபுவழி கதிர்காமத்தம்பி சந்தனப்பிள்ளை தம்பதிகளின் நான்காவது அன்பு மகள் அன்னலெட்சுமியைக் கரம்பிடித்து இல் வாழ்க்கை இனிதே மலருங்காலமதில் தலைமகன் திவாகரன் பெண்மகளாக பாமினி, மாலினி, தாரிணியையும் பெற்றெடுத்து தக்க வயதில் கல்வியூட்டி பாங்காய் வளர்த்தார். மூத்த மகள் பாமினி ஆசிரியையாய் பணியாற்றிய தருணம் இதயமதில் இரசித்து மகிழ்ந்தார்.

காலத்தின் கட்டளையில் மற்ற மகவுகள் கடல்கடந்து வாழ்ந்த நிலையில் அவர்கள் மன விருப்புடன் பண்புநிறை ராதிகாவை அன்பு மருமகளாகவும் பண்பின் பெருந்தகையார் ஜெயரெத்தினம் மற்றும் சிவராஜன் என்போரை அன்பு மருமகன்மாராகவும் ஏற்று இதயமது இனிதே மகிழ்ந்து வாழ்ந்து, மக்கள் வழிவந்த பேரப்பிள்ளைகள் அப்ஷரா, விதுஷா, அர்ஜுன், ஐஸ்வரா, அபிஷேக், சௌமிக்காவோடு பாசப்பிணைப்பில் மகிழ்வுடன் வாழ்ந்து வந்தார்.

அன்னாளில், இறைவன் தன்திருவடி சேர்க்க உளம் கொண்ட தருணம் ஏகாதசி தினத்தில் தனது 87வது வயதில் 05-07-2021 அன்று இறைதாழ் அடைந்தார்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நாதரே!

கரம்பிடித்த நாள் முதல்
காலமெல்லாம் காப்பாற்றி
கண்கலங்காமல் வாழவைத்த - என்
கண்கண்ட தெய்வமே!

என் பாசத்தின் இருப்பிடமே
எம்மவர்க்கும் எந்நாளும்
எத்துயரும் அணுகாமல்
எமைக்காத்த என்னவரே!

அன்பிலும் பாசத்திலும் - நீங்கள்
இமயம் போல் இருந்தீர்கள்
இன்று உங்களது பிரிவால் - என்
விழிகள் இரண்டும்
கண்ணீர்க்கடலாய் மாறியதே!

என் பிரியமுள்ள நாதரே
தாராள மனம் கொண்ட என் தாயாரே
தாரம் எனை தவிக்கவிட்டு சென்றதேனோ!

தேகம் இன்று குளிரவில்லை
இதயம் இருட்டில் மிதக்கின்றது
துடிக்கும் இமைக்குள் - உங்கள்
விம்பம் தெரிகிறது
உறக்கம் உங்களுக்கு - யார்
தந்தது நாதா!

மண்விட்டு மறைந்து - நீங்கள்
விண்நோக்கிச் சென்றாலும் - என்
கண் விட்டு மறையாமல்
காலமெலாம் வாழ்வீர்கள்



பாசமுடன்

**மனைவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுள்ளே என் அப்பா....


அப்பா நித்தம் நித்தம் உங்களை நினைத்துக் கொண்டிருந்தேன்
தினம் தோறும் உங்கள் நலம் வேண்டி நின்றேன்
திடீரென ஓர்நாள் திடுக்கிடும்
செய்திகேட்டு திசைமாறிப் போனேன்

அமைதியாகத் துயிலும் உங்கள் முகம் காண
ஓடிவருவோமென்று போகாத இடமெல்லாம் போய்
பொய்யாகிப் போனேன். காலத்தின் கோலத்தால்
கடைசிவரை உங்கள் முகம் காண முடியவில்லை அப்பா
இருந்தும்,

காத்திருந்து கடல்கடந்து வந்தேன்
படுக்கையில் நீங்கள் இருந்த இடம் பார்த்து
பரிதவித்துப் போனேன்
துயிலிடம் சென்று துவண்டு போனேன்
என் கண்களில் சொரிகின்ற கண்ணீருக்கு
முடிவில்லை அப்பா....

நீங்கள் என் தெய்வம்
மூத்தபிள்ளை ஆண்மகன் என்று தூக்கி வளர்த்தீர்களே
தூங்கும் போதெல்லாம் துணையாய் நின்றீர்களே
என்னை பாடகனாக்கி பார்த்து மகிழ்ந்தீரே
என்வாழ்வின் உயர்வுக்கு பாடுபட்டீர்களே அப்பா

என் உயர்வு பார்த்து இன்முகம் காட்டி
பெருமையுடன் இதமாகப் பேசுவீர்களே
காற்றோடு காற்றாய் கதைபல கூறுவீர்களே
ஆனால் இன்று
காலன் கையில் அகப்பட்டீர்களே அப்பா
காலம் பல கடந்தாலும் உங்கள் முகம்
கலங்கரை விளக்காக கடைசிவரை என் இதயத்தில்
நீங்காதிருக்கும்



அன்பு மகன்

**திவாகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஓர் அம்மாவாய் வாங்கப்பா

பாசத்தின் வடிவாகவே
பண்புடன் வாழ்ந்திருந்து
பரிதவிக்கவிட்டு மறைந்து
போனீர்களே அப்பா....
பாரதி, கண்ணனைப் பல
வடிவங்களில் கண்டார்.
அதுபோல் எங்களுக்கு
நீங்களும்.......
பெற்றெடுத்ததில் தந்தையாய்
வளர்த்ததில் தாயுமானவனாய்
கற்றுத்தந்ததில் ஆசானாய்
கருத்துப்பரிமாற்றத்தில் நண்பனாய்
இப்படி எத்தனை வடிவங்களில்
எம்முடன் வாழ்ந்தீர்கள்
நீங்கள் எங்களுக்கு வைத்த பெயர்
உங்களுக்கு நினைவு இருக்கிறதா?
பெயர்சொல்லி அழைத்ததை
இது நாள்வரை நாம் அறியோமே
அழைத்ததெல்லாம் தம்பி,
புள்ள, குட்டியம்மா, சின்னவா!
இதமான அந்த அழைப்பு
இதயத்தை வருடுமே
பாடம் மட்டுமா?
மாடுகள் மேய்த்திடும் பையன்.... தொடக்கம்
மாதவி பொன்மயிலாள்.... வரை
பாட்டும் சொல்லித்தந்து
கேட்டு மகிழ்வீர்களே!
எத்தனை இனிமையான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் அவை.
எங்களுக்கு உடல்நோய் வந்தால்
வலியும், வேதனையும்
உங்களுக்கன்றோ!
துடித்து போவீர்களே அப்பா!
எத்தனை தேர்ச்சிகள் பெற்ற
ஆசிரியர் நீங்கள்.
சைவமும், தமிழும் அழகு தமிழில்
அருவியாய் உங்கள் நாவில்
சொட்டுமே!
கம்பராமாயணம் முதல் நளவெண்பா வரை
காட்சிகளைக் கண்முன்
கொண்டுவருவீர்களே!
சைவத்தை உணர்வு பூர்வமாய்
எமக்கு ஊட்டுவீர்களே
உங்களிடம் கற்ற மாணவர்கள்
யாராலுமே மறுக்கமுடியாத உண்மை இது.
இயற்கையின் நியதி மரணம் - என்றாலும்
எங்களை பொறுத்தவரை உங்களுக்கு
மரணமே இல்லை - எங்கள்
நினைவுகளில் என்றும் சிரஞ்சீவியாய்
வாழ்வீர்கள் அப்பா!
நடைமுறை சாத்தியமற்றது என்றாலும்
ஆற்றாமையால் அழைக்கின்றோம்
கெதியாய் வாங்கப்பா மீண்டுமோர்
அம்மாவாய் எங்களுக்கு....



ஓம் சாந்தி!.. சாந்தி!!... சாந்தி!!!...

*புள்ள*
**பாமினி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்குள் அப்பா!

எத்தனை பேருக்கு கிடைக்கும் இப்
பாக்கியம்?
மனித வடிவத்தில் ஒரு கடவுள்!
எத்தனை பொறுமை, நிதானம், அமைதி
அத்தனைக்கும் ஓர் வடிவம் என் அப்பா
நீங்கள் பேசும் போது கூட குரல்
உயர்த்தியதில்லை.
உங்கள் குரல் கேட்டதெல்லாம்
நீங்கள் பாடிய தாலாட்டிலும்
சொல்லிய கதையிலும் தான்.
நீங்கள் எங்களுக்காக விட்டுச்
சென்றவைகள் ஏராளம்.
அவற்றில் அன்பும், பாசமும்
அளவுக்கதிகம்.
நீங்கள் சொல்லித்தந்தவைகள்
அதிகம்.
அவற்றில் தேர்ச்சியும், நிதானமும்
இன்னும் அதிகம்.
நீங்கள் தந்தவைகள் அதிகம்
அவற்றில் தைரியமும்,
தன்னம்பிக்கையும் ஊற்றெடுத்து
பெருகியிருக்கிறது.
உங்கள் உதவுகின்ற குணம் பார்த்து
வியர்ந்தவர்களில்
உங்கள் குட்டியம்மாவும் ஒன்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய சுத்தத்தையும்
நேர்த்தியையும் பார்த்து என்னை
பிராமணத்தி என்று அழைத்தீர்கள்.
மகாபாரதத்தில் கிருஷ்ணனைப் போல்
என் மகள் நடுநிலையானவள் என்று
சொன்னீர்கள்
இருந்த போதெல்லாம் - குருவாக,
பாதுகாவலனாக, வைத்தியனாக,
சேவகனாக, தந்தையாக...
இவை எல்லாவற்றுக்கும் மேலாக
தாயாகவும் இருந்து
எங்களை விட்டு சென்று விட்டீர்களே
இத்தனையும் இனி எப்போது
பார்ப்போம்?
உங்கள் உணர்வுகள் எங்கள்
உள்ளத்தில் ஊற்றெடுத்துக் கொண்டே
இருக்கிறது.
அமைதியின் வடிவமே!
எங்கள் தந்தையே!
ஏக்கத்தோடு காத்திருக்கிறோம்....
தாய்மையுணர்வோடு மீண்டும்
வாருங்கள் அப்பா!



குட்டியம்மா
**மாலினி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்ன மகளின் புலம்பல்

எனைக்கையெடுத்த நாட்தொட்டு
கருவிழியில் எனை வைத்து கண்ணிமையால் மூடி
பெருமையாய் வளர்த்தெடுத்து வாழ்வு தந்த
எனதருமை தந்தையே,! எங்கு சென்றீர் எனை விட்டு
நெஞ்சுக் கூட்டுக்குள் நெருப்பாய் எரிகின்றது
என் அப்பா என்னிடம் இல்லையென்று....

நாம் விடுமுறைக்கு வரும்போதெல்லாம்
வழிமேல் விழிவைத்து காத்திருந்து
ஆசையுடன் உச்சிமோர்ந்து வரவேற்கும்
எனதருமைச் சூரியனே,! என் இதயக் கோவிலே அப்பா
இந்தச் சின்னவளை மறந்து எங்கு சென்றீர்கள்
தேடுகிறேன்.... தேடுகிறேன்.... திரும்பி வருவீர்களா அப்பா....

"வாழ்ந்தால் எந்நாளும் உமக்கென வாழ்வேன்
வாடா மலர் போல உங்களை காப்பேன்" என்று
நீங்கள் பாடும் அந்தக் குரல், இனிமேல் எங்கு கேட்பேன்
இயலாமல் இருந்த போதுகூட சின்னவா சின்னவா என்று
எனை அழைத்தது இன்னமும் காதினில் ஒலிக்கிறதே அப்பா
மனம் ஏற்க மறுக்கிறது நீங்கள் இல்லை என்பதை,....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நல்வாழ்வுக்காய் தனிமையில் தத்தளித்த என் தங்கமே
தனிமை போதுமென்றெண்ணி உங்கள் தாயை தேடிச்சென்றீர்களா?
இல்லை, எனக்குக் கிடைத்த தந்தைபோல் தனக்கில்லையே
என்றெண்ணிய அந்த இறைவன் மீண்டும் அவனிடம்
உங்களை அழைத்தாரோ, அந்த சொர்க்க வாசலுக்கு
ஏன் சென்றீர்கள் அப்பா எனை மறந்து.....

அப்பா நீங்கள் வலம்வந்த இடமெல்லாம்
உங்களை ஊர்வலமாய் கொண்டு சென்றார்களே, எங்கே அப்பா
என் பாசக்கடலே அப்பாவாய் மட்டும் இல்லாது
தாயிடத்தையும் நிறைத்தீர்களே அப்பா.
எனைக்காத்து வளர்த்த என் காவல் தெய்வம்
இப்போது மன வேதனையின்றி துன்பம் துயரமின்றி
நிம்மதியாய் உறங்கும் என் கறுப்பு நிலாவுக்கு!
உங்கள் சின்னவளின் தாலாட்டு
ஆராரோ ஆரிவரோ என் தந்தைக்கு நிகர்யாரோ
அமைதியாக உறங்குங்கள் தந்தையே தாங்கி கொள்கிறேன்.



*சின்னவா*
**தாரிணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவீஸில் மகள் பேரப்பிள்ளைகளுடன்



சொந்தங்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாசமுள்ள மனைவியுடன்



சுவீஸிற்குச் சென்ற போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் அழுகிறதே!

பாசத்தின் இருப்பிடமான
எங்கள் மாமாவே
உங்களது பிள்ளைகளாய்
தங்கள் மனமதில் தாங்கி
பாசத்தைக்காட்டி
நலமதை நாமடைய
தந்தையாய் ஆன மாமாவே!

உங்களது பிரிவால்
எங்களது உள்ளம்
உருகியது தந்தையே!

கடல்கடந்து வர முடியாமல்
கரை ஒதுங்கி நின்றோம்
பாசத்தோடு எங்களை
பார்த்த பண்புயர்வை
இன்றும் நினைத்து நினைத்து
நீங்காத்துயர் அடைகின்றோம்
எங்களது மாமாவே!

உங்களது நினைவு
எங்களது உள்ளத்தில்
என்றென்றும்
நீங்காத நினைவாக இருக்கும்



தங்கள் ஆத்ம சாந்திக்கு
நாளும் எமது வேண்டுதல்
நித்தம் தொடரும்...
இறைவனை வேண்டுகின்றோம்!

மருமக்கள்
**ஜெயரெத்தினம்,**
**சிவராஜன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமகளின் உள்ளத்திலிருந்து

அன்பு மாமா நீங்கள்
ஆதரித்து நின்றீர்கள் எம்மை
நெடுந்தூரம் நாமிருந்தாலும்
உடனிருந்தோம் பாசப்பிணைப்பினாலே

உங்கள் அன்பின் ஆழமதால்
அடிக்கடி வந்திடுவோம் உங்களிடம்
பெற்ற மகளைப் போல் என்னை
பேணிப் பணி செய்தீர்கள்

நீங்கள் விரும்பி நின்ற உணவெல்லாம்
தந்து மகிழ்ந்திடுவேன்
என்றும் எம்முடன் இருந்திடவே
இயன்றவரை முயன்று நின்றேன்

தந்தை முகம் காணவில்லை நான்
அவ் ஏக்கத்தை போக்கியதும் நீங்கள்தான்
தந்தையின் பணிவிடைகளை தங்களுக்குச் செய்து
அகம் மகிழ்ந்தேன் நான் அன்புடனே

கொடிய காலன் எம்மை விட்டு
உங்களை எடுத்துச் சென்றாலும்
உங்கள் அன்பு உள்ளம் என்றும்
எங்கள் நினைவெல்லாம் நிறைந்திருக்கும்



மருமகள்
**ராதிகா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மப்பா! அப்பப்பா! எங்கே?

குழப்பமான கனவுகளால் நிரம்பிய பொழுதுகள்....
பார்க்கும் ஒவ்வொன்றிலும் வெண்முகில் பரவலிடையே....
இருண்டு தெரியும் உருவமாய் எங்கும்
நீங்கள் தான் அப்பப்பா!

நிழலின் அசைவுகளாய் உங்கள் குரல் ஒலியின் பரம்பல்
எங்கும் சூழ தூக்கம் கலைந்து
துயரில் நாங்கள்....
நகரமறுக்கின்ற பொழுதுகள் காலத்தின் ஆழுங்களில்
ஞாபகங்களின்பழுங்குகைக்குள்
உங்கள் கைவிரல்கள் பற்றி தத்திதத்தி விழுந்துவிடுவோமா....
என்ற பயத்தில்
உங்கள் கவனம் எங்கள் மீதாய்....
அங்குமிங்கும் நடைபயிலவைத்து
எங்கள் புன்னகையே....
உங்கள் சொர்க்கம் என்பீர்களே அன்பாய் அணைத்த
அன்புக் கரங்கள் எங்கே?
உங்கள் பிரிவால் சிறைபட்டு தனிமை கொண்டு
இந்தத் துயரிலும்.... துயராய்....

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கிறோம்



*பேரப்பிள்ளைகள்*
**அப்ஷரா, விதுஷா,**
**அர்ஜுன், ஐஸ்வரா,**
**அபிஷேக், சௌமிக்கா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வருவீரோ தாத்தா!

கண் இமைக்கும் பொழுதில்
காணாமல் போய்விட்டீர்களே - தாத்தா

காத்திருந்தோம் பல நாளாய்
எங்களோடு கதைப்பீர்கள் என்று
அதற்கிடையில் காலன் வந்து
காத்திருக்காமல் கவர்ந்து சென்றுவிட்டானே - தாத்தா

அன்போடு எங்களை அரவணைத்து வளர்த்ததை
ஆசையோடுஎண்ணுகின்றோம் - தாத்தா
இனிமையாக பேசி இன்னமுது ஊட்டியதை
எங்களால் இன்றும் மறக்க முடியவில்லையே - தாத்தா

தாலாட்டி சீராட்டி தூங்க வைத்த நாட்களை
தயவோடு எண்ணி பார்க்கின்றோம் - தாத்தா

தாத்தா தாத்தா என்று தவழ்ந்து வரும்போது
தாங்கிப்பிடித்து அணைத்ததை
இன்று எங்களால் தாங்கமுடியவில்லையே - தாத்தா

தேவாரம் தொடக்கம் திருக்குறள் வரை
திரிவுபடாமல் தினந்தோறும் புகட்டியதை
எப்போதும் மறக்க முடியாது - தாத்தா



இப்பூவுலகை விட்டு நீங்கள் சென்றாலும்
வானுலகில் தெய்வத்துள் தெய்வமாக
வாழ்வீர்கள் தாத்தா

பேத்திமார்
**அக்ஷயா, அனாகதா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிறந்தநாள் நிகழ்வில் குடும்பத்தாருடன்




மகன், மகள், மருமகள், பேரனுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவீஸில் உறவுகளுடன்



சுவீஸில் பேத்தியின் பிறந்தநாள் விழாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசையப்பா!

நீங்கள் எங்களோடு இங்கு இல்லை என்பதை
என்னால் ஒரு கணமும் ஜீரணிக்கமுடியவில்லை
காரணம் - நான் வீட்டுக்குள் வந்தவுடன்
"மனே" என்று நீங்கள் அழைக்கும் குரல்
காதில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.
நான் என் தாய் தந்தையர்க்கு முதல் பிள்ளையாக இருந்தாலும்
உங்களுக்கு நான் கடைக்குட்டி தானே!
நான் உங்களுக்கு பணிவிடை செய்யும் போதெல்லாம்
மனம் நெகிழ்ந்து என்னை "என் கடைக்குட்டி"
"என் தாய்க்குருவி" என்றல்லோ அழைப்பீர்கள்
நீங்கள் எனக்கும் ஆசையப்பா தான்
என் பிள்ளைகளுக்கும் ஆசையப்பாதான்
ஒரு கணம் நான் மனம் சோர்ந்தால்
என்னை அழைத்து முகம் பார்த்து
ஆறுதல் கூறி மகிழ வைப்பீர்கள் ஆசையப்பா!
நானும், நீங்கள் அன்பாய் "தம்பா" என அழைக்கும் என் மகன் டிலுவும்
உங்களுக்கு செய்துவந்த கடமையுடன்
இறுதிக்கடமைகளையும் உங்களுக்காக செய்தது
எமது பாக்கியம்
இத்தனை நினைவுகளும் பசுமையாய் இருக்க
கண்களை குளமாக்கிவிட்டு
காற்றில் எங்கே மறைந்து விட்டீர்கள்!
காண்போமா இனி...



*பெறாமகள் கடைக்குட்டி*
**(ஸ்ரெல்லா)**
*பேரன்*
**தம்பா (டிலு)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயிற் சிறந்த தயவான தத்துவர்

பெற்ற பிள்ளைகளைப் போல் எங்களை பேணிக்காத்த பெரியப்பாவின் நினைவுகள் என்றும் பசுமையானவை. அவர் எங்களிடம் காட்டிய கனிவு நெஞ்சத்தில் நிலையான இடம் பிடித்துள்ளது. ஒரு தாய் பிள்ளைகள் போல உங்கள் பிள்ளைகளுடன் சேர்ந்து வளர்ந்தோம்.

எங்களுக்கு நல் வாழ்க்கையை தேடித்தந்தவர். எங்கள் முன்னேற்றத்தில் மகிழ்ச்சியடைந்து குடும்ப வாழ்வு சிறக்க அறிவுரையும் ஆலோசனையும் வழங்குவார். எங்களுக்கு வாழ்வளித்த தெய்வத்திற்கு காலம் முழுவதும் நன்றிக்கடன் பட்டுள்ளோம்.

எங்கள் பெரியப்பாவின் இறுதிக்கால பணிகளை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு இருந்தோம். கோவிட் - 19 பரவலால் உலகம் பாதிக்கப்பட்ட நிலையில் தாயகம் வரமுடியாதது கவலையளிக்கிறது.

பெரியப்பாவின் ஆத்மா இறையடி சேர்ந்து பேரின்ப வாழ்வுபெற பிரார்த்திக்கின்றோம்.



*பெறாமக்கள்*

**லாவண்யா துஸியந்தன்**

**கவிதா முருகதாஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறாமகளின் குடும்பத்தினரின் உள்ளத்திலிருந்து....


எம் அருமை ஆசப்பா
எம் குடும்பத்திற்கே ஆசப்பா
"மனே" எனும் வார்த்தையில்
அத்தனை அன்பையும் நிறைத்தவர் நீங்கள்

மூத்த பெறாமகள் தான் - ஆனாலும்
சிறுவயதில் குளிப்பாட்டி சீராட்டினீர்
ஒவ்வொரு பிறந்தநாளிலும் - உங்கள்
அன்பு இழுத்துவிடும் எம்மை அங்கு

தன்னிகரில்லா ஆசான் நீங்கள்
தனிப்பெரும் அன்பாளனாய் வாழ்ந்தீர்கள்
உங்கள் கள்ளம் கபடமற்ற வெள்ளை உள்ளம் போல்
உங்களைச் சுற்றியும் வெள்ளை உடைதான்

வெள்ளை வேட்டி சேர்ட் உடன்
உங்கள் நேர்த்தி புலப்படுத்தும் உளத்தூய்மையை
பாசப் பெரும் புதையல் ஆசப்பா நீங்கள்
உறவுகளை என்றும் போற்றிடுவீர்

எங்கள் நவராத்திரி நைவேத்தியம் விரும்பி உண்பது
அதில் நிறைந்திருக்கும் எங்கள் பாசம் அத்தனையும்
எம்மைவிட்டு நீங்கினாலும் கூட
அன்பின் சொரூபமாக வாழ்வீர்கள் என்றும்
எங்களின் இதயத்தில் நிறைவாக



பெறாமகள் - **வசந்தி**
குடும்பத்தினர் மற்றும்
**பேரப்பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயுமான தாய்மாமன்

"தோன்றில் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று"

எனும் பொய்யாமொழிப் புலவரின் வாக்கிற்கு ஒப்ப இப்புவியில் வாழ்வாங்கு வாழ்ந்த எங்கள் மாமா இறைவனின் பாதக்கமலத்தில் பிறவா வரம் பெற்று வீற்றிருக்க இறைவனை இறைஞ்சுகிறேன்.

மாமா என்ற வார்த்தைக்கு வரைவிலக்கணமே நீங்கள் தான். அன்பு, பண்பு, பரிவு, பாசம் எதிலுமே உங்களுக்கு நிகர் யாருமில்லை. மடிப்புக்கலையாத வேட்டியும், அரைக்கை சேட்டும், செந்தமிழ் கமழும் இனிமையான பேச்சும் உங்களை ஓர் உயர்வான ஆசானாக பறைசாற்றும்.

எந்தவொரு நல்ல காரியத்திற்கும் நானோ, எனது பிள்ளைகளோ உங்களிடம் ஆசிரிவாதம் வாங்கும் போது தலையில் கைவைத்து அழகான ஆழமான வார்த்தைகளால் வாழ்த்தும் ஆத்மார்த்தமான வெளிப்பாடு எனது கண்களில் கண்ணீர் வரச் செய்யும்.

நீங்கள் மரணப்படுக்கையில் இருக்கும் போதும் "செல்லம்மா, அக்கா, சின்னவா" என்று அழைத்தால் அதில் பாசம் நிறைந்திருக்கும். "சாமி அண்ணர் எனது தாயுமானவர்" என்று உங்கள் சகோதரர்களின் நினைவுகளை வார்த்தைகளால் நினைவு கூர்ந்து கொண்டே இருந்தீர்கள்.

அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து பண்புடமை காத்து பக்குவமாய் வழிநடந்தீர். இரக்கத்தின் இருப்பிடமாய் ஈகை பல செய்து எல்லோருக்கும் நல்லவராய் நாணயமாய் நடந்தீர். கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும் எங்கள் முன்னே உங்கள் நினைவுகள் எந்நாளும் உயிர் வாழும்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.



ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

*உங்கள் மருமகள்*

**சாரதா (திருமதி.சரஸ்வதி அரியரெட்ணம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உவெஸ்லியின் ஆளுமை ஒன்று மறைந்தது

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையில் 80,90களில் பிரதி அதிபராகப் பணியாற்றிய, ஓய்வு பெற்று, அமரத்துவம் அடைந்த அமரர் என்.காசிப்பிள்ளை ஐயாவின் சில நினைவுகளை பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கின்றேன்.

உவெஸ்லி உயர்தர பாடசாலையில் 80, 90களில் ஒரு பொற்காலம் என்றே கூறுதல் வேண்டும். அக்காலத்தில் கடமையாற்றிய ஆளுமை நிறைந்த பலருள் காசிப்பிள்ளை ஆசிரியரும் ஒருவர். நான் மாணவனாக இப்பாடசாலையில் கல்வி கற்ற காலத்தில் நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை, வெள்ளை வேட்டி சட்டை அணிந்த உயர்ந்த, உயரிய பண்புகளைப் போதிக்கும், போற்றும் ஒரு சிறந்த ஆசானான அவரை நினைத்துப்பார்க்கிறேன். அவை என் ஆழ்மனதில் பசுமை மாறாமல் இன்னும் அப்படியே உள்ளது அவரது நினைவுகள்.


நேரம் தவறாது பாடசாலைக்குள் பிரவேசிப்பார் அவருக்கான பல பணிகளை செவ்வனே நிறைவேற்றி மாணவர்களின் ஒழுக்கத்தை கண்டிப்புடன் கவனிப்பார். பின்னர் அவரது நிர்வாகம் தொடர்பான பணிகள் தொடரும் இப்பணிகள் அனைத்திலும் ஒழுங்கும் ஒரு நேர்த்தியும் இருக்கும். அவரது கையெழுத்துக்கே ஓர் தனித்துவம் இருக்கும் அவ்வளவு அழகான எழுத்துக்கள் அவை. அவரது கடமைகளை கண்டு பலதடவைகள் வியப்படைந்து இருக்கிறேன். பல விடயங்களை கற்றும் கொண்டேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட வேளையில் பாடத்தை பாங்குடன் கற்பிப்பார். வகுப்பறையிலேயே அவரது கற்பித்தல் என்றாலே ஒரு தனித்துவம் தெரியும். வகுப்பறை முகாமைத்துவம் அவரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியது ஒரு பாடம் ஆகும். நானும் அவரது கடமைகளை கண்டு பலதடவைகள் வியப்படைந்து இருக்கிறேன். பல விடயங்களை கற்றும் கொண்டேன்.

இதற்கும் அப்பால் சிறந்த தமிழ், சமய பற்றாளன் அனைவருடனும் அன்பாய் பழகும் பண்பாளர் இவர். இவரும் எனது தந்தையாரும் ஆசிரிய கலாசாலையில் ஒன்றாக கற்றவர்கள். என்னைக் காணும்போதெல்லாம் என் தந்தையைப் பற்றி ஆர்வமாய் விசாரிப்பார். அவரது நட்பு வட்டங்களை சிறந்தவகையில் பேணி வந்தவர். பாடசாலை ஆசிரியர்கள் அவரைச் சந்தித்து குசலம் விசாரிக்க செல்லும் போதெல்லாம் அன்பாகப் பேசி ஆதரிப்பார். மிகவும் இனிமையாகப் பழகுவார். இவரின் இழப்பு மிகவும் வேதனைக்குரியது எனினும் உலக நியதியை யார் மாற்றுவது. அன்னாரின் பிரிவால் வாடி நிற்கும் அவரின் குடும்பத்தவருக்கும் பாடசாலைச் சமூகம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களை கூறுவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

- நன்றி -



**திரு.செல்லத்தம்பி கலையரசன்**

*அதிபர்*

*கமு/உ வெஸ்லி உயர்தர பாடசாலை,*

*கல்முனை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கணமாக வாழ்ந்த பெருமகன்

"அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்"

எனும் பொய்யாமொழிக்கிணங்க பெரியாரைப் போற்றித் தமக்குச் சுற்றத்தாராக்கிக் கொள்ளுதல் பெறத்தக்க அரிய பேறுகள் எல்லாவற்றிலும் அருமையானதாகும்.

அமரத்துவமடைந்த நா.காசிப்பிள்ளை அவர்கள் எனக்கு சுற்றத்தாருள் பெரியவராகி என் நன்மதிப்புக்கும், அன்புக்கும் உரியவர். எனது குடும்ப உறவினர் மட்டுமன்றி எனது பள்ளிப்பருவத்தில் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை பிரதி அதிபருமாவார். சிறந்த தமிழ் புலமையாளர், நேர்த்தியான கையெழுத்து, தமிழ் பண்பாட்டு உடை, திடமான பேச்சு, இவரிடம் நான் கண்ட இலட்சணங்கள். என்னை மகன் என்று அழைத்ததை விட வேறு வகை வார்த்தை கிடையாது.

கல்முனை பிறப்பிடமாக இருந்த போதும் பாண்டிருப்பே சொந்த இடமாக இருந்தது. கல்முனைப் பிரதேசம் முழுவதும் இவரின் குடும்ப சொந்தங்களும், உறவினர்களும் நிறைந்துள்ளனர். தான் பிறந்த வீடும், புகுந்த வீடும் இனசன பந்தங்களால் அதிகமானது. இவரது துணைவியார் அன்னலெட்சுமி அவர்கள் எந்தவொரு விடயத்திற்கும் முன்னின்று வழிநடத்தக் கூடியவர். தன் கணவன் பிள்ளைகளை சரியான முறையில் வழிநடத்த கூடிய ஆளுமையுள்ள குடும்பத்தலைவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுக்கு இல்லப்பேறாக நான்கு பிள்ளைகள். மூத்தவர் ஒரே ஆண் மகன் திவாகரன் சுவிஸ் நாட்டிலும், பெண் மக்களில் மூத்தவர் பாமினி பட்டதாரி ஆசிரியர், மாலினி, தாரிணி சுவிஸ் வாழ் பிரஜையாக கணவன் பிள்ளைகளோடு வாழ்கின்றனர்.

அமரர் காசிப்பிள்ளை ஆசிரியரைப் பற்றி விசாரித்தாலும் தமிழ்பாடத்தைப் பற்றி கூறிவிட்டே ஏனைய விடயங்களை பேசுவார்கள். தாம் கற்றுக் கொண்டவற்றை வாழ்க்கையில் பிரயோகப்படுத்த வேண்டும். இதுவே கல்வியில் எதிர்பார்க்கப்படும் பிரயோக ரீதியான மாற்றமாகும். ஒருவரின் ஆளுமை வளர்ச்சியில் தாய்மொழியின் அவசியம் முக்கியமானது. மொழித்தேர்ச்சியே ஆளுமையை தீர்மானிக்கும் பிரதான காரணி. தொடர்பாடல் திறன் மனித செயற்பாட்டின் அத்திவாரமாகும். காசிப்பிள்ளை ஐயாவின் தமிழ்மொழி ஆற்றல் இங்கு முக்கியம் பெறுகிறது.

தன் வாழ்நாளை 87 வயதில் பூரணமாக வாழ்ந்து முடித்தார். இறுதி நாளில் அவர் அவஸ்தைப்படவில்லை. தனது முதுமையின் தளர்விலும் நினைவு தடுமாறாமல் கடவுள் நம்பிக்கையோடு கந்தசஷ்டி கவசம் பாடி தனது பூதவுடலை விட்டு விண்ணுலகு சென்றார். இறைவனின் திருவடி நிழலில் நித்திய வாழ்வு கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.மாணிக்கப்போடி லக்குணம்**
*(சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்)*
*பாண்டிருப்பு - 01, கல்முனை.*
*தொ.இல: 0778854449*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் நினைவுகளில்.... காசிப்பிள்ளை மாமா....

சிறு பிள்ளைப் பராயத்தின் உறவது. இன்றுவரை தொடர்கிறது. நினைக்கும் போதே உள்ளூரப் பிரவகிக்கும்..... காசிப்பிள்ளை மாமா. அப்பாவின் மிக நெருங்கிய நண்பர் அன்னமணி மாமி. அவர் மனைவி எனது அம்மாவின் பள்ளித் தோழி. அடிக்கடி எல்லோரும் சந்தித்துக் கொள்வார்கள்.

காசிப்பிள்ளை மாமா உப அதிபராக உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது நான் உயர்தரப் பரீட்சை எடுப்பதற்காக என் அப்பாவுடன் என்னைக் கூட்டிக் கொண்டு போய் அதிபராக இருந்த யோகம் Sir இடம் என் மருமகள் என அறிமுகப்படுத்தி பாடசாலையில் சேர்த்துவிட்டார். பார்க்கும் போதெல்லாம் அறிவுரை சொல்வார். இப்போதும் இந் நினைவுகள் என்னுள் பசுமையாகவே இருக்கின்றன.

மிகவும் அன்பானவர் அவர் எப்போதாவது அதிர்ந்தாரா, ஆர்ப்பரித்தாரா என என்னுள் எந்த ஞாபகமுமேயில்லை. பளிச்சிடும் கண்களுடனும், புன்னகையுடனும் பாடசாலையிலும், எம்மூரிலும் வலம் வருவார். எல்லோராலும் மதிப்புடனும், உயர்வாகவும் பார்க்கப்பட்ட ஒருவர். தனது மனைவியுடனும், பிள்ளைகளுடனும் அழகிய வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்.

வாழ்வுச் சக்கரத்தில் காலங்கள் மாற, காட்சிகள் மாற, பாதைகள் மாறி வாழ வேண்டிய போராட்டத்தில் செம்மையாக வாழ்ந்தவர். தனது இழப்புக்களையோ, கவலைகளையோ யாரிடமும் பகிர்ந்து சுமை இறக்கியவரல்ல. தன் சுமைகளைத் தானே சுமந்து அதிராமலும், அழகு கெடாமலும் வாழ்க்கையைச் செப்பனிட்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பும், இறப்பும் இயற்கைதான்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்

வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

என்பதற்கிணாங்க வாழ்ந்து எல்லோராலும் நேசிக்கப்பட்டவர். அவர் நடந்த பாதையின் தடயம் என்னுள் பசுமை நிறைக்கிறது. எங்கள் சுக துக்கங்களில் தன்னையும் பங்காளியாக்கி பகிர்ந்து கொண்டவர். இவ்வுலகம் விட்டு விண்ணுலகம் சென்றாலும் உங்கள் நினைவுகள் எம்முள் என்றுமே தங்கும்.

பூமியில் வாழும் காலத்தில் எங்களை அரவணைத்து அன்பு காட்டிய உங்களை ஊரில் சிறந்த மனிதனை, குடும்பத்திற்கு ஒளி விளக்கான உங்களை ஆண்டவன் சேர்த்துக் கொள்வான்.

எல்லாம் வல்ல இறையடியில் அவன் ஒளியுள் அமைதியும், ஆனந்தமும் பெற்றிட எனதும், எனது குடும்பத்தினதும் பிரார்த்தனைகள்.



*உங்கள் நினைவுகளுடன்*

**Dr.புஷ்பலதா லோகநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை உவெஸ்லியின் ஒய்வுநிலை பிரதி அதிபராகச் சேவையாற்றிய என்.காசிப்பிள்ளை அவர்களின் நினைவில் தோய்தல்

அமரத்துவம் அடைந்த உயர்திரு. என்.காசிப்பிள்ளை அவர்கள் எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவர். அன்னாரின் மரணத்தினால் மிகக் கவலையடைந்தேன். பத்திரிகை படிப்பதிலும் தென் இந்திய நாவல்களை வாசித்து ரசிப்பதிலும் ஈடுபாடு கொண்டவர். நகைச்சுவையான விடயங்களை தான் சிரிக்கவே சொல்லி முடிப்பார்.

நல்லாசிரியர் என ஆசிரிய சமூகத்தாலும், ஏனையோராலும் பாராட்டப்பட்டவர். ஆசிரிய சேவையில் மட்டுமன்றி பாடசாலையின் புறக்கிருத்திய சேவையிலும் முன்னின்றுழைத்தவர்களில் இவரும் ஒருவர். பின்தங்கிய மாணவர்களை இனங்கண்டு சனி, ஞாயிறு தினங்களில் மாணவர்களை வரவழைத்து கற்பித்து வந்த நல் ஆசான் இவர்.

இவர்கற்பித்த மாணவர்களின் பெற்றோரும் இவரிடம் பெரும் மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தனர். கணவனின் பணிக்கு அவரது மனைவியும் உதவி ஒத்தாசை உடையவராக இருந்தார்.

இறைநேசகரான இவர் இரக்கசுபாவம், ஈதல், உதவிபுரிதல் போன்ற குணநிலன்களைக் கொண்டவர். தமிழர்தம் பாரம்பரியங்களையும், கலாசாரங்களையும் பேணுவதில் அக்கறையுடையவராகவும் மிளிர்ந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய ஆற்றல்களையும், திறன்களையும், பண்புகளையும் கொண்ட மனிதருடன் தொடர்பாடி அனுபவம் பெற்றதை ஒரு பேறாகவே நான் நினைக்கின்றேன். இவரது மூத்த மகள் படிப்பில் மிகக் கெட்டிக்காரி. பரதம், நாட்டியம் இவவுக்கு கைவந்த கலை. கலைப்பட்டதாரியான இப்பிள்ளை ஆசிரியர்களை மதிப்பு மரியாதையோடே நேசங் கொண்டவர்.

வாழும் மனிதன், மாண்ட மனிதனின் அருமை, பெருமைகளை நினைந்து துயர்பகிர்தல், நினைவில் தோய்தலும் ஒருவித மனிதப்பண்பே ஆகும். மறைந்த என்.காசிப்பிள்ளை சேர் அவர்களின் 31ம் நாளில் அவரைப்பற்றிய வாழ்வியல் நலன்களை நினைத்து சாந்தி பெற அன்னாரது குடும்ப உறுப்பினர்களுக்கு தக்க வல்லமையை வழங்க வேண்டும் என்று இறைவனை வணங்குவோமாக.

**வ. சுப்பிரமணியம்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசிப்பிள்ளை சேர் என்னும் விம்பம்

எங்கும் மௌனம்....
புயல் அடங்கி....
உங்கள் உருவின் நிழல்களுடன்
பரந்த வெளியில்
பரவிநிற்கும் நீலமாய்....
கண்களைவிட்டு அகல.... அகல....
மனவெளியில்;
தாமரை இலையின்மேல்
தண்ணீராய்!
உலகில் இருப்பராயும்
உலகத்தினராய் இல்லாது
இருப்பதுமாய்!
தங்களின் வாழ்வை
அறைக்குள் அடக்கிக் கொண்டாலும்,
நிறங்களற்ற தன்மையாய்
எந்த நிறமும் கொள்ளாது
உங்கள் படைப்பு என்பதாலோ
வெள்ளையைப் போர்வையாக்கி
அனைத்து நிறங்களை அடக்கிக் கொண்டு
மௌனம் கலந்த புன்னகையுடன்
தடுமாறுகின்றபோதெல்லாம்
தமிழில் தாங்கள் தரும்
விளக்கங்கள்
கறுப்பாய் இருக்கும்
குயிலின் இனிமை....
உங்களின் கற்பித்தலில்....
அதிபருக்கருகில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்துப் பதிவேடுகளின்
குவியல்களுக்கிடையில்
வெற்றிடங்கள் நிரப்பும் வேலைகளுடன்
இடைஇடையில்
மன்மதன் சேருடன்
நீங்களும் இணைந்து விடும்
நகைச்சுவை கலந்த
உரையாடல்கள்;
இடர்கின்றவர்களுக்கு
தமிழ்மொழி, நீதியில் தரும்
விளக்கங்கள்
இன்றும் பசுமையாய்....
மற்றவர் மனங்கோணாது
பதிலுரைக்கும் உங்கள் மாண்பு....
சீரான பல்வரிசைகாட்டும்
புன்னகை....
என் மனத்திரையில்....
நமது உரையாடலில் ஒரு நாள்....
நமது துக்கங்களில் உண்மையில்லை....
நமது வருத்தங்களில் ஆழமில்லை
என்று கூறி அடுத்த கணமே....
என் வாழ்வில் எந்த வரியையும்
மகிழ்வுடன் எழுதியதே இல்லை....
என்று கூறிவிட்டு
அடுத்த கணமே....
மகிழ்வுடன் மீண்டும்
மீண்டும் சிரிப்பீர்கள்....
இன்றும் பசுமையாக....



ஒய்வுநிலை கணித ஆசிரியர்
**P.நவசிவாயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன் துணை

# கழுகு மலைப்பத்து



கழுகுமலை தனிலுறையும் முருக வேளே
கருத்துடனேயுன் பாத மலர்தானே ஓதப்
பழுதொன்றும் வாராமல் காக்க வேணும்
பச்சைமால் தன் மருகா பார்வதியின் மைந்தா
வழுவாமல் அடியேன்முன் நிற்க வேணும்
வரும்பிழைகள் தனை அகற்றி வழியே செய்வாய்
தெளிவாக வுன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே

காடுதனில் வேங்கை மரமாகி நின்றாய்
கானவர்கள் கண்டுன்னைக் கடுவேகத்தால்
சாடிடவே மனதிலெண்ணிப் பரிசை கத்தி
தானெடுத்தார் தவிடுபொடியாக்க வென்று
கூடியே குறவரெல்லாம் நிமித்தங் கண்டு
குமரவேள் என்றெண்ணிக் குலைந்திட்டார்கள்
தேடியே உன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே

கிட்டாத பொருள்தனைப் போலென்னாளும்
கீர்த்தியுடனே இந்தப் புவியில் யானும்
எட்டி எட்டியே உன்னைப் பார்க்கும் போது
ஏமாற்றி என்னை விட்டேகலாமோ
சட்டமுடன் தோகை மயில் மீதிலேறிச்
சடாட்சரமாய் என்முன்னே தோற்றவேணும்
திட்டமுடன் உன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீர்த்தியுடனேயிந்தப் புவியில் யானும்
கிருபையுடன் உன்பதியைத் தேடிவாறேன்
பூத்தமலர் போலவுன்னைக் காண்பதெப்போ
புண்ணியனே எனக்கு வரம் தருவதெப்போ
வார்த்தையொன்றுமுரையாயோ வள்ளிவாழ்வே
வந்துனது சன்னிதியில் மனதன்பாகச்
தீர்த்தங்கள் ஆடி உன்னைத்துதிப்பேனையா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே

குவலயத்தில் அடியேன் நான் செய்த பாவம்
குற்றமெலாம் பொறுத்துனது குழந்தையைப்போல்
கவலையற்று வாழ்ந்திருக்க கருணை தந்து
காப்பதுவுன் செயலல்லோ கார்த்திகேயா
சவலை இளம் கன்றுதன் தாயைத்தேடி
தயங்கிறது போலேயான் தியங்கலானேன்
சிவலை நிறமார்பழகா செந்தூர்க்கந்தா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே

கூடியே மறலிஎன்னைப் பிடியாவண்ணம்
கொடுநரகிலே யானும் வீழ்ந்திடாமல்
வாடியே மனம்மெலிந்து போகாவண்ணம்
மாகவே உன்னுடைய கீர்த்தி தந்து
பாடியே பவனொளிபவாயமென்றால்
பறக்குமே பிசாசுமுதல் ஏவல் தானும்
தேடியே உன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே

கெடுதி உள்ள சூரனைவதையே செய்தாய்
கிளிமொழியாள் வள்ளிதினைப்புனத்திலே தான்
படிமீதில் தான் பெரிய பண்டாரம்போல்
பாசிபற்றிய பல் பழுத்த கிழவனாகித்
தடியூன்றித் தண்டுக மண்டலமும் கொண்டு
சாஸ்டாங்க மாய்க் குறவர்க் கெதிரே சென்றாய்
தேடியே உன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேசவனார் மருகோனே நீசெய்கோலம்
கெடிதான குமரகுரு வேடனாகித்
நேசமுடன் கையில் வில் அம்புங் கொண்டு
நிமிஷமுடன் வள்ளிதினப்புனத்திலே தான்
பாசமுடன் பெண்ணே கண்ணே என்று
பண்புடைய வள்ளியை நீ பாகம் செய்தாய்
தேசமெல்லாம் திரிந்தலைந்தேன் உன்பாதம் காணச்- சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே

கையிலே கோழிக் கொடியும் வேலும்
வள்ளிதெய்வானையுடன் மயில் மீதேறித்
தைய நல்லாள் தீபதூ பம் பிடிக்கத்
தாதியர்கள் இருபுறமும் கவரி வீச
மெய்யுடனே ஆறுமுக ரூபமாகி
வேலவனே வந்தெனக்குவிடைகள் தாரும்
தெய்தெய்யஎன் றுன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே

கொன்றைமலர் வேணியனே உனக்குத் தானே
குழந்தையாய் வந்துதித்த குமரவேளே
அண்டரெல்லாம் முனைக்காண வேண்டியிங்கே
அபயமென்று கையேந்தி அணுகி நிற்பார்
தண்டை கிண்கிணி காலில் சதங்கை கொஞ்சத்
தானோடிவந்துனது ஒளியைக் காட்டும்
தெண்டனிட்டே உன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோதையர்கள் இருபுறமும் கவரி வீச
குளிரான மதிமுகங்கள் ஆறும் துன்னக்
காதலுடன் பன்னிருகை வேலுந்துன்ன
கானமயில் மீதேறும் கார்த்திகேசா
வாதுடனே யசோதையன் றன்சிரசந்தன்னை
வடிவேலால் நீறு செய்த வானோர் கோவே
சீதமருகோனே உன் புகழைச்சொன்னேன் - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே

கவ்வியே பூதமென்னைப் பிடியாவண்ணம்
காத்துனது கிருபை தந்து ரட்சியுமையா
வவ்வியமெய்மறந்து மொருபசாசுதானும்
பவனொளி பவாய வென்றால் பறந்திடாதோ
ஒவ்வியே எனைச்சூழும் லாடன்மாடன்
ஓம் நமசிவாயமென்றால் ஓடிடாதோ
செவ்வையாய் உன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே

இக்கணமே இதுநல்ல வேளையையா
இதோ பாரும் சன்னிதியில் திருவிழாவை
வணக்கமுடன் கற்பூரமடவிளக்கு
வாகைவகையாய்க் கன்னியர்கள் ஏந்திநிற்க
எக்காளம் பேரிகையும் தம்பூர் மேளம்
இடியெனவே எத்திசையும் முழங்கி நிற்க
சிக்கணமே உன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே



- சுபம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ தேவராய சுவாமிகள் அருளிய

# கந்த ஷஷ்டி கவசம்

## காப்பு

### நேரிசை வெண்பா



**துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம், நெஞ்சில்**
**பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்து ஓங்கும்**
**நிஷ்டையுங்கை கூடும், நிமலர் அருள் கந்தர்**
**சஷ்டி கவசந்தனை.**

### குறள் வெண்பா

**அமரர் இடர்தீர சமரம் புரிந்த**
**குமரன் அடிநெஞ்சே குறி**

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்கு தவுஞ் செங்கதிர் வேலோன்
பாதமி ரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட
மைய நடஞ்செய்யும் மயில்வாகனனார்
கையில் லோல் எனைக் காக்கவென்று உவந்து
வர வர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர பவண வருக வருக
அசுரர் குடிகெடுத்து ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டு ஆயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டு இலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுங் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற்று எம்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனிஒளி யொவ்வும்
குண்டலி யாம் சிவகுகன் தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறுஇடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்நெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிஇரு திண்புயத்து அழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மனி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்து அணி மார்பும்
செப்பு அழகுடைய திருவயிறு உத்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும் இணை முழந்தாளும்
திருவடியதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகநக நகநக நகநக நகென
டிகுண டிகுடிகு டிககுண டிகுண
ரரரர ரரர ரரரர ரரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி ரிரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
எத்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதன் என்று
உன் திருவடியை உறுதியென்று
எண்ணும் என்தலை வைத்து உன் இணையடி காக்க
என்னுயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்கக்
கதிர்வேல் இரண்டும் கண்ணினை காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத்து இருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்வை இரத்ன வடிவேல் காக்க
சேர்இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டு முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நல் துணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்கத் தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வாலாகூஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புறக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களைத் தொடரும் பிரம்ம ராட்சதரும்
அடியேனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காடடேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக்காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைகள் உடனே பலகல சத்துடன்
மனையிவ் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒரு வழிப்போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதர்கள் எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓட
படியினில் முட்டாப் பாசக் கயிற்றால்
கட்டுன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்க
செக்கு செக்குச் செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணல் எரி
தணல்எரி தணல்எரி தணல் அது ஆக
விடுவிடு வேலை வெருண்டது ஓடப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலியும் நரியும் புந்நரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந்து ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விக்ஷங்கள் கடித்து உயிர் அங்கம்
ஏறிய விக்ஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்தனைக் கண்டால்
நில்லாது ஓட நீ எனக்கு அருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகள்ஒளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகர் அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத்து உறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமார
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலையுறும் செங்கல்வராயா
சமரா புரிவாழ் சண்முகத்து அரசே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க, யான் உனைப்பாட
எனைத் தொடர்ந்து இருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் வெற்றியின் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன் அருள் ஆக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தர்க வேலாயுதனார்
சித்திபெற்ற அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்களன் வறுமை நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
வெற்றவன் நீகுரு பொறுப்பது உன் கடன்
பெற்றவள் குறமகள் பெற்ற வளாமே
பிள்ளையென்று அன்பாய் பிரியம் அளித்து
மைந்தன்என் மீது உன் மனமனகிழ்ந்து அருளித்
தஞ்சமென்று அடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சகூஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடன்ஒரு நினைவது ஆகிக்
கந்தர் சகூஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுஉருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்து நீறு அணிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் செயலது அருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நககோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல்லொழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்ரு சங்கா ரத்தடி
அறிந்து எனது உள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துஉண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்து அமுது அளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
என்னைத் தடுத்து ஆட்கொள் எந்தனது உள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனாதிபதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி!
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலா போற்றி!
உயர்கிரி கனகசபைக்கு ஓர் அரசே!
மயில் நடன இடுவோய்க் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!

- மங்களம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் தெரிந்து இருக்க வேண்டிய சில மரணச்சடங்கு கருமங்கள்

**உடலை விட்டுப் பிரியும் போது உயிர் வெளியேறும் உறுப்புக்கள் ஒன்பது**

உடலின் கண்கள் 2, காதுகள் 2, மூக்குத்துவாரம் 2, வாய், மலவாசல், சலவாசல்

**கொள்ளி குடம் எடுப்பது**

தந்தைக்கு மூத்த மகனும் தாய்க்கு இளைய மகனும் இதில் பங்கு கொள்வர். இவர்கள் இல்லாதவிடத்து மிக நெருங்கிய வழி உறவினர் செய்வர்.

**மருணித்த உடல் வைக்கப்படும் இடத்தில் வெள்ளை கட்டுவது**

உடலை விட்டு வெளியேறிய உயிர் ஆதாரமின்றி அந்தரப்படும் வேளை உயிர் தங்குவதற்காகவே புதிய தூய வெள்ளை கட்டப்படும்

**மருணித்தவருக்கு கூறைச்சேலை, வேட்டி சால்வை, ஆபரணங்கள் போடுவது**

மருணித்தவர் இறுதி யாத்திரை செல்லும் வேளை வாழ்வில் அணிந்த உயர்ந்தவற்றை அவருக்கு அணிந்து மங்களமாக வழியனுப்பும் மன திருப்திக்காக

**குடும்பத்தில் ஒருவர் இறந்தால் தீட்டின் தன்மை**

தந்தை இறந்தால் ஒரு ஆண்டு தீட்டுக்காத்தல், தாய் இறந்தால் ஆறுமாதகால தீட்டுக்காத்தல், சகோதரர்கள் இறந்தால் மூன்று மாதகால தீட்டுக்காத்தல், பங்காளிகள் (பேரப்பிள்ளைகள், அண்ணன்தம்பி பிள்ளைகள்) இறந்தால் 16 நாட்கள் தீட்டுக்காத்தல்

மிகவும் தவிர்க்க முடியாதவிடத்து விநாயக ஹோமம் செய்தபின் சுப காரியங்களை எளிமையாக செய்ய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலைமாட்டில் ஒற்றைத்திரி நெய்விளக்கு ஏற்றுவது**

உடலைவிட்டு வெளியேறிய உயிர் இருட்டில் அலையாமல் அது செல்லும் வழிக்கு தெய்வீக ஒளி உண்டாக்குவதற்கு தெற்கு திசை நோக்கி ஏற்றப்படும்

**மஞ்சள் கலந்த தண்ணீரால் கால் கழுவுதல்**

கிருமிநாசினியான மஞ்சள் சுற்றாடலை தூய்மைப்படுத்தும் என்பதற்காக

**மருணித்தவருக்கு உறவினர்கள் கால் கழுவுவது**

உரிமைக்காரர்கள் இறந்தவருக்கு இறுதியாக செலுத்தும் மரியாதையாகும். சில இடங்களில் காலில் பூ வைத்து வணங்கும் வழக்கமும் உண்டு.

**வாய்க்கரிசி போடுவது**

மருணித்தவர் பசி தாகத்தோடு செல்லக்கூடாது என்பதற்காகவும் இதுவரைகாலமும் உணவு தந்தவருக்கு வாய்நிறை அரிசிபோடும் வழக்கம் உண்டு. பெண்கள் வீட்டிலும் ஆண்கள் மயானத்திலும் வாய்க்கரிசி போடுவர்.

**எட்டுச்செலவு என்பது**

இறந்த எட்டாம் நாள் அவருக்கு விருப்பமான உண்பன, தின்பன, பருகுவன முதலிய உணவுகளை தேடிப் படைத்து கும்பிட்டு ஒரு பகுதியை எடுத்து முச்சந்தியில் கழித்து விடப்படும் நிகழ்வு

**அந்தியெட்டி முப்பத்தோராம்நாள் சடங்கு செய்வதன் முக்கியத்துவம்**

உடலைவிட்டு பிரிந்த உயிர் 31 நாட்கள் அந்த இடத்தில் இருக்கும் என்பது சாஸ்திர உண்மை. (ஆன்மாவுக்கு ஒரு நாள் 31 தினங்கள்) 31 ம் நாள் கிரியையுடன் அது செல்ல வேண்டிய கதிக்கு சென்றடையும்.

**தொகுப்பு:**

சைவக்கிரியை விளக்கம், சிவசிரார்த்த விதி,
சிரார்த்த தீபிகை முதலிய நூல்களிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்றாட வாழ்வின் பயனுள்ள நெறிமுறைகள் சில...

- நம்மை ஒருவர் கேட்காத வரையில் நாம் அவருக்கு ஆலோசனை கூறக் கூடாது.

- பெண்சாபம், செய்ந்நன்றி மறத்தல் பிறர் மனைவி அடைதல் இவை மூன்றுமே பிராயச் சித்தமேயில்லாமல் அனுபவித்தே தீர வேண்டிய பாவங்களாகும்.

- குரு, நோயாளி, கர்ப்பிணி முதலியவர்களுக்கு அவர்களுடைய தேவைக்காலத்தில் கண்டிப்பாக உதவ வேண்டும். இது மிகவும் புண்ணியமாகும்.

- நெருப்பை வாயால் ஊதக் கூடாது.

- தலையையோ, உடம்பையோ வலக்கையினால் மட்டும் சொறிய வேண்டும். இரண்டு கைகளாலும் சொறியக் கூடாது.

- சாப்பிடும் போது நீர் குடிக்க கூடாது. உண்ட பின் சிறிதாக குடிக்கலாம்.

- தலைவாசலுக்கு நேரே கட்டில் போட்டோ தரையிலோ படுக்கக் கூடாது.

- ஒரு காலினால் இன்னொரு காலைத் தேய்த்து கழுவக் கூடாது.

- சூரியன் உதயமாவதற்கு முன் எழுந்து விடுவது நல்லது. இத்தகைய நற்பழக்கம், ஆரோக்கியம், செல்வம், அறிவு விருத்திக்கு வழிகோலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒரு பெண்ணையும் அழவைக்காதீர்கள். ஏனெனில் தெய்வம் அவள் விடும் கண்ணீர்துளி ஒவ்வொன்றையும் எண்ணிக் கொண்டிருக்கிறது.

- மாணவர்கள் கிழக்கு நோக்கி உட்கார்ந்து படித்தால் கல்வி சிறக்கும்.

- அங்கவீனர், நோயாளர், கல்வியில்லாதவர், ஆறுவிரலுடையவர்கள் முதியோர், வறுமையிலுள்ளோர் இவர்களது குறையை குத்திக்காட்டி பேசக்கூடாது. இது பாவமாகும்.

- ஒருவர் தலையில் முடிந்த பூவைத் தன் தலையில் வைப்பதை தவிர்க்க வேண்டும். தலையில் சூடிய மலரைத் தானே எடுத்தெறியக் கூடாது.

- ஆலயத்தில் ஒருவரை ஒருவர் கும்பிடலாகாது. கைகூப்பி கும்பிட்டவருடைய கர்மங்கள் (பாவம்) எதிரில் உள்ளவரைச் சார்ந்துவிடும். கோயிலிலிருந்து பிரசாதம் தவிர வேறெதையும் எடுத்துச் செல்லக் கூடாது.

**இந்து தர்ம நூல்களிலிருந்து....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய சூழ்நிலையில் நம்முடைய எண்ண அலைகள் நேர்மறை எண்ணங்களாக அமைந்து, வாழ்வில் வெற்றிபெற சில வழிகள்

**01. மனதை திசை திருப்புங்கள்:-**

- துயரடையச் செய்த, செய்கின்ற பழைய எண்ணங்கள் மீண்டும் மீண்டும் வரும்வேளை உண்மையான உறவினர், நண்பனிடம் மட்டும் மனம் விட்டு பேசுங்கள்.
- வளர்ப்பு பிராணியுடன் சிலவேளைகளை செலவிடுங்கள்.
- உடற்பயிற்சி செய்யுங்கள்.
- நடைப்பயிற்சி செய்யுங்கள்.
- கடைக்குச்சென்று உங்களுக்கு பிடித்தமானவற்றை வாங்குங்கள்.

**02. எதுவும் செய்யாமல் யோசித்துக் கொண்டு இருக்காதீர்கள்.**

- உங்களுக்கு ஆர்வமான விடயங்களில் ஈடுபடுங்கள்.
- நகைச்சுவை நிகழ்ச்சிகளைப் பாருங்கள்.
- உங்களுக்குப் பிடித்தமான இடத்திற்கு பயணம் செய்யுங்கள். மனம் விசாலமாகும்.
- உங்களில் முழு நம்பிக்கை கொள்ளுங்கள்.

**03. உடனே அழித்து விடுங்கள்.**

- ஒரு வெள்ளைத் தாளை எடுத்து உங்கள் மனதை கஸ்டப்படுத்திய விடயங்களை வரிசையாக எழுதுங்கள். பின்னர் அந்த தாளை எரித்து சாம்பலாக்கிவிடுங்கள். இதனால் அகத்தின் துயர் நீங்கி, மனம் புத்துயிர் பெறும்.
- தினமும் யோகா அல்லது தியானம் செய்யுங்கள்.

வாழ்வின் ஒவ்வொரு கணத்தையும் சரியாக சிந்தித்து விழிப்புணர்வுடன் இருந்தால் எதிர்மறை எண்ணங்கள் அருகே வராது. வாழ்க்கை உங்களுக்கு வெற்றிதான். மகிழ்ச்சிதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 1934 | | 2021 |
| 09 | | 07 |
| 05 | | 05 |



கல்முனையை பிறப்பிடமாகவும் பாண்டிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர்.நாகமணி காசிப்பிள்ளை

(ஓய்வு பெற்ற பிரதி அதிபர்)

அவர்கள் 2021.07.05 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம் சென்ற நாகமணி, காளியம்மை ஆகியோரின் அன்பு புதல்வனும் காலம் சென்ற கதிர்காமத்தம்பி, சந்தனப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும் அன்னலெட்சுமியின் அன்புக்கணவரும் திவாகரன் (சுவிஸ்), பாமினி, மாலினி (சுவிஸ்), தாரணி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலம் சென்ற செல்லம்மா, கணபதிப்பிள்ளை, கதிரவேல்பிள்ளை, நல்லதம்பி, தெய்வானைப்பிள்ளை மற்றும் சாமித்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயரெட்ணம் (சுவிஸ்), சிவராஜன்(சுவிஸ்), ராதிகா (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் காலம் சென்ற இராஜேந்திரன், சோதிமணி, சந்திரசேகரம், நடேந்திரன் சிவபாக்கியம் மற்றும் நாகலெட்சுமி, ராஜலெட்சுமி, கனேசலெட்சுமி ஆகியோரின் மைத்துனரும் அப்சரா, விதுஷா அபிஷேக், சௌமியா ஆகியோரின் அம்மப்பாவும் அர்ஜீன், ஐஸ்வர்யா ஆகியோரின் அப்பப்பாவும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2021.07.05 அன்று அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பிற்பகல் 4 மணி அளவில் பாண்டிருப்பு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதனை உற்றார் உறவினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்

தகவல் அன்னாரின் குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு:
05
-
09
-
1934



உதிர்வு:
05
-
07
-
2021

## அமரர். நாகமணி காசிப்பிள்ளை

முன்னாள் பிரதி அதிபர் - உவெஸ்லி உயர்தர பாடசாலை, கல்முனை.

செந்தமிழும் சைவமும் சிறப்பாக கற்பித்தீர்
செந்தாமரை போல் விரியும் சிரிப்பு உங்களதே
மாணவர்களோடும், ஊழியர்களோடும் உவகை காட்டிய
உத்தம ஆசான் நீங்கள்.

சைக்கிளிலே விரைவாக வந்து சேர்ந்து,
பதிவேட்டை சரிபார்த்து முடித்து
பதிலொழுங்கு செய்து - முதல்வேலை முடிப்பீர்.
பின்னான வேலைகள் தொடர்ந்தே செல்லுமன்றோ...

மாணவர் அனுமதியும், நிருவாக வேலைகளும்,
ஆசிரியர் சம்பளமும் உங்களின் கடமையன்றோ,
அரைக்கை சேட்டும் வேட்டியும் உங்கள் அடையாளம் அன்றோ.
அழகான கையெழுத்து இன்னமும் துலங்குதல்லோ...

நாகரிகமாக பேசும் நிருவாகி நீங்கள்
பல அதிபர்களுடன் பணியாற்றி பரிணமித்தவர் நீங்கள்
செந்தமிழ் உச்சரிப்பு தவழும் உங்களிலே
தொடர்ந்து வேட்டி கட்டிய இறுதி ஆசான் நீங்கள்.

ஓய்வு காலத்தில் கலந்து கொண்ட நிகழ்வுகள்
மறையாது எங்கள் மனதின் எண்ணங்களில்,
உங்களின் ஆளுமையும், அரவணைப்பும்,
என்றும் உவெஸ்லியில் நிலை நிற்கும்.

இவ்வண்ணம் அன்னாரின் பிரிவால் துயருறும்:

**பாடசாலை சமூகம்**

**உவெஸ்லி உயர்தர பாடசாலை, கல்முனை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப வம்சாவழி

நாகமணி + காளியம்மை

- அமரர் செல்லம்மா
- அமரர் கணபதிப்பிள்ளை
- அமரர் கதிர்வேல்பிள்ளை
- அமரர் நல்லதம்பி
- அமரர் தெய்வானைப்பிள்ளை
- சாமித்தம்பி
- **அமரர் காசிப்பிள்ளை**

கதிர்காமத்தம்பி + சந்தணப்பிள்ளை

- அமரர் இராசேந்திரன்
- அமரர் சோதிமணி
- அமரர் சந்திரசேகரம்
- அமரர் நடேந்திரன்
- அமரர் சிவபாக்கியம்
- **அன்னலெட்சுமி**
- நாகலெட்சுமி
- இராசலெட்சுமி
- கணேசலெட்சுமி

அன்னலெட்சுமி + அமரர் காசிப்பிள்ளை

- திவாகரன் + ராதிகா → அர்ஜுன், ஐஸ்வரா
- பாமினி
- மாலினி + ஜெயரெத்தினம் → அப்ஷரா, விதுஷா
- தாரிணி + சிவராஜன் → அபிஷேக், சௌமிக்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நன்றி நவிலல்

அமரத்துவமடைந்த எமது அன்புத் தெய்வம்

## அமரர்.
## நாகமணி காசிப்பிள்ளை

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு எமது இல்லம் வந்து இறுதி அஞ்சலி செலுத்தி, ஆறுதல் கூறி பல வழிகளில் உதவிய உறவுகளுக்கும் நண்பர்களுக்கும், மற்றும் நேரில் வந்தும், தொலைபேசி மூலமும் ஆறுதல் தெரிவித்த சுவிஸ்வாழ் உறவுகள், நண்பர்களுக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- நன்றியுடன் -



**குடும்பத்தினர்**
**தொ.இல: 0773850116**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிகள்

சுயநலம் அற்றவர்களாக இருங்கள். ஒரு நண்பன் மற்றொருவரைத் தனிமையில் தூற்றுவதை ஒரு போதும் கேட்டுக் கொண்டிருக்காதீர்கள்

உன் நிலை எப்படிப்பட்டதாக இருந்தாலும், அதைக் குறித்து நீ கவலைப்பட வேண்டாம். இலட்சியத்தைப் பற்றிக்கொண்டு முன்னேறியபடி இரு.

பாமரனைப் பண்புள்ளவனாகவும், பண்புள்ளவனைத் தெய்வமாகவும் உயர்த்தும் கருத்தே மதம் எனப்படும்.

கண்டனம் செய்யும் சொல் எதையுமே சொல்ல வேண்டாம். உதடுகளை மூடிக்கொண்டு உங்கள் இதயங்களைத் திறந்து வையுங்கள்.

சுயநலம் அற்ற நன்மையின் அளவுதான் வெற்றியின் அளவை எல்லா இடத்திலும் நிர்ணயம் செய்கிறது.

கீழ்த்தரமான தந்திரங்களினால் இந்த உலகில் மகத்தான காரியம் எதையும் சாதித்து விட முடியாது. இது என் உறுதியான நம்பிக்கை.

அன்பின் மூலமாகச் செய்யப்படும் ஒவ்வொரு காரியமும் ஆனந்தத்தைக் கொண்டு வந்தே தீரும்.

வாழ்க்கை என்னும் போர்க்களத்தில் அஞ்சாது எதிர்த்து நிற்கும் வீரன் ஒருவனுடைய மனநிலையே நமக்கு இப்போது தேவை.

நமது வாழ்க்கை சிறந்ததாகவும், தூய்மையுடையதாகவும் இருந்தால் மட்டும்தான் உலகமும், சிறப்பும், தூய்மையும் பெற்றதாக இருக்க முடியும். அது காரியம் நாம் அதை விளைவிக்கும் காரணம். எனவே நம்மை நாம் தூய்மைப்படுத்திக் கொள்வோமாக. நம்மை நாம் பரிபூரணர்களாக்கிக் கொள்வோமாக.



விரிந்து கொண்டே போவதுதான் வாழ்க்கை. குறுகிச் செல்வதை மரணம் என்றுதான் சொல்ல வேண்டும்.

கோல்டன் அச்சகம். கல்முனை. 067-2223939

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org